**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. எம். ராமதாஸ், எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 30 ம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண்.3/2025 இன்**

**அசல் வழக்கு எண்.109/2024**

1) P. வெள்ளத்துரை
2) P. செல்லப்பா ... மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

// எதிர் //

P. நடராஜன் ... எதிர்மனுதாரர்/வாதி

இந்த மனுவானது, என் முன்பு இறுதியாக 25.11.2025 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. த. வேல்முருகன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. N.K. வானுமாமலை அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரையை கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இம்மனுவானது, வா.சா.1 ஐ மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு வா.சா.1 ஐ மீண்டும் அழைக்க அனுமதி வழங்க

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.30 18:59:04 +0530

வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 18 விதி 17 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனு சுருக்கம்</u> :-**

மனுதாரர்கள் பிரதான வழக்கில் பிரதிவாதிகள் ஆவார்கள் என்றும், பிரதான வழக்கில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் விவாத உரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், எனவே மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் விவாத உரைக்காக தனது வழக்கறிஞருடன் ஆலோசனை செய்த போதுதான் வா.சா.1 ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது சில கேள்விகள் கேட்க விடுபட்டுள்ள விபரத்தை அறிந்தேன் என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நல்ல கட்சி உள்ளது என்றும், இம்மனுவை அனுமதிக்கும் பட்சம் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கை விரைந்து முடிக்க தயாராக இருக்கிறோம் என்றும், எனவே வா.சா.1 ஐ மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மீண்டும் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு வா.சா.1 சாட்சியத்தை மீண்டும் ரீ-கால் செய்ய அனுமதி வழங்கி உத்தரவிட வேண்டியது நீதியின் பொருட்டும், நியாயத்தின் பொருட்டும் அவசியமாக உள்ளது என்றும், இல்லாவிடில் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அளவிட முடியாத கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.30 18:59:10 +0530

**3) <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u> :**

மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், அது பிரதமத்திலேயே தள்ளுபடி செய்யப்பட வேண்டியதாகும் என்றும், இந்த மனுவை தாக்கல் செய்வதற்கு மனுதாரருக்கு உரிமை இல்லை என்றும், உண்மையான சங்கதிகளை மறைத்து இம்மனு பொய் சங்கதிகளுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது, சில முக்கியமான கேள்விகள் விடுபட்டுவிட்டது என்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூறுவது பொய் என்றும், என்ன கேள்விகள் விடுபட்டது என்று சொல்லப்படவில்லை என்றும், என்ன காரணத்தினால் முக்கியமான கேள்விகள் விடுபட்டது என்று சொல்லப்படவில்லை என்றும், இம்மனு அனுமதிப்பதற்கு போதுமான காரணங்கள் கூறப்படவில்லை என்றும், தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், கெட்ட எண்ணத்துடன் அசல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதற்காகவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**4) <u>தீர்வுக்குரிய பிரச்சனை</u> :-**

இம்மனுவானது, வா.சா.1 ஐ மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு வா.சா.1 ஐ மீண்டும் அழைக்க அனுமதி வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.30 18:59:15 +0530

**5)** இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் தரப்பில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் விவாத உரைக்காக தனது வழக்கறிஞருடன் ஆலோசனை செய்த போதுதான் வா.சா.1 ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது சில கேள்விகள் கேட்க விடுபட்டுள்ள விபரத்தை அறிந்தேன் என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நல்ல கட்சி உள்ளது என்றும், இம்மனுவை அனுமதிக்கும் பட்சம் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கை விரைந்து முடிக்க தயாராக இருக்கிறோம் என்றும், எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

**6)** எதிர்மனுதாரர் தரப்பில், வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யும்போது, சில முக்கியமான கேள்விகள் விடுபட்டுவிட்டது என்று மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூறுவது பொய் என்றும், என்ன கேள்விகள் விடுபட்டது என்று சொல்லப்படவில்லை என்றும், என்ன காரணத்தினால் முக்கியமான கேள்விகள் விடுபட்டது என்று சொல்லப்படவில்லை என்றும், இம்மனு அனுமதிப்பதற்கு போதுமான காரணங்கள் கூறப்படவில்லை என்றும், தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றும், கெட்ட எண்ணத்துடன் அசல் வழக்கை இழுத்தடிக்க வேண்டும் என்பதற்காகவே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுவை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2026.01.30 18:59:20 +0530

**7)** அசல் வழக்கானது, எதிர்மனுதாரர்/வாதியால் தபசில் சொத்தில் வாதிக்குரிய 1/3 பாகத்தை நட்பு திட்பு பார்த்து பிரிவினை செய்யும் விதத்தில் முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பிக்கக் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு விசாரணையும் முடிக்கப்பட்டும், அசல் வழக்கு விவாத உரைக்காக போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள்/பிரதிவாதிகளால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் விவாத உரைக்காக தனது வழக்கறிஞருடன் ஆலோசனை செய்த போதுதான் வா.சா.1 ஐ பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது சில கேள்விகள் கேட்க விடுபட்டுள்ள விபரத்தை அறிந்தேன் என்றும், மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் நல்ல கட்சி உள்ளது என்றும் மனுதாரர்கள் தரப்பில் கூறப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் ஏற்கனவே இ.ம.எண்.2/2025 என்ற மனு தாக்கல் செய்து, வா.சா.1 ஐ மீண்டும் அழைக்க ஏதுவாக அசல் வழக்கை மறுதிறவு செய்ய மனு தாக்கல் செய்ததில், அம்மனு இந்நீதிமன்றத்தால் 30.01.2026 ல் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களுக்கு அவர்களது வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு அளிக்கும் விதமாக, வா.சா.1 ஐ மீண்டும் அழைத்து, மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.30 18:59:25 +0530

**8)** முடிவாக, வா.சா.1ஐ மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு வா.சா.1ஐ மீண்டும் அழைக்கலாம் என இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.30 18:59:30 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.30 18:59:36 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம்,

நான்குநேரி

இ.ம.எண்.3/2025 இன்

அ.வ.எண்.109/2024

நேரிய/வரைவு உத்தரவு

நாள் - 30.01.2026